SURESH' IAS ACADEMY

# 26.09.2026 செய்திகள்

## மேக் இன் இந்தியா

- இந்தியாவில் அதிக உற்பத்தி; இந்தியாவில் அதிக முதலீடு; இந்தியாவில் இருந்து அதிக ஏற்றுமதி என பல்வேறு துறைகளிலும் மாற்றம் தெளிவாக தெரிகிறது.
- இந்தியா வளர்ச்சி அடைந்து வளம் பெறுவதற்கு தேவையான உள்கட்டமைப்பு, தொழில் மற்றும் புதுமைகளை உருவாக்குவதே 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் நோக்கம்.
- செமி கண்டக்டர், விண்வெளி மற்றும் விமானத்துறை, ரயில் இன்ஜின்கள் மற்றும் பெட்டிகள் தயாரிப்பு, கப்பல் கட்டுமானம், மெட்ரோ ரயில் வலையமைப்பு, ஆட்டோ மொபைல், மருந்துகள், சூரிய மின் உற்பத்தி, மொபைல் போன் தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை விளக்கும் வீடியோவையும் பிரதமர் தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.
- இந்தியாவை உலகளாவிய உற்பத்தி, வடிவமைப்பு மற்றும் புதுமை மையமாக உருவாக்கும் நோக்கில், 'மேக் இன் இந்தியா' திட்டம் 2014 செப்.25ல் துவங்கப்பட்டது.
- முதலீடுகளை எளிதாக்குதல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் உலக தரத்திலான உள்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றில் 'மேக் இன் இந்தியா' திட்டம் கவனம் செலுத்துகிறது.
- குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம் என்ற கொள்கையின் அடிப்படையில், நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இதன் அடுத்த கட்டமாக 'மேக் இன் இந்தியா 2.0' திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- தற்போது, உற்பத்தித் துறையில் 15 மற்றும் சேவைகள் துறையில் 12 என மொத்தம் 27 துறைகள் இத்திட்டத்தின் கீழ் இடம்பெற்றுள்ளன.